1639

1639

[illegible] 3 Rgd. No. M. 2194



# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| Vol 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 8 |
|---|---|---|
| | பால்குண மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமீ (12—3—33.) | நெ 8 |





மகாமகம் 10-3-33.

| நெ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 225 |
| 2. | சங்கரலீலா விலாசம் (ஸ்ரீமான் H. சுப்பராவ்) | 233 |
| 3. | ப்ரம்மண சந்திரிகை (ஸ்ரீமான் எம். ராமராவ்) | 237 |
| 4. | மணிமஞ்ஜரி (ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார்) | 241 |
| 5. | [illegible]மாலை | 245 |
| 6. | [illegible]திரட்டு. | 247 |
| 7. | [illegible]நிலைமைகள். | 248 |

ஆசிரியர்
[illegible] ரங்கநாதா[illegible]

72
N3
208703

# SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை,
R. ரகூத்தமராவ் மானேஜர்

---

ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

## ஸ்ரீ கீதாதத்வம் (முதற்பாகம்.)

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்மம் பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம பேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ பகவத்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான தாத்பர்யமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்கிறவர்கட்கு ரூ. 1–14–0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகைகள் அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். ஒவ்வொரு மாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன், வியாஸவிலாசம்,
கும்பகோணம்.


ஸ்ரீ [illegible]

# மாத்வமித்திரன்.

20 MAR 1933 MADRAS

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतः भेदा,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

பதினேழாவது அத்யாயம்.
(காபிரைட் முன் தொடர்ச்சி)
(ஸ்ரீமத். வே. பாகவத ரெங்கநாதாசாரியார் மொழி பெயர்ப்பு.)

---

பிறகு சிசுபாலன் ஓர் மாப்பிள்ளை காசியாத்திரை செல்லும் வேஷத்துடன் வந்தான். அப்பொழுது ஸாத்யகி ஸிம்ஹம்போல் கர்ஜித்துக்கொண்டு சிசுபாலனிடம் வந்தான். ஸாத்யகி சிசுபாலன் இவர்கள் உத்தமமான அஸ்த்ரசஸ்த்ரங்களை விருஷ்டி செய்து கொண்டு வெகுநேரம் யுத்தம் செய்து கோபத்தால் சரீரம் கடுமையவர்களாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். ஸாத்யகி தன் ஸமத்வம் சிசுபாலனுக்கு யுத்தத்தில் ஏற்பட்டதைப் பொறுக்கமாட்டாதவனாய் ஓர் பாணத்தை இழுத்தான். பிறகு அந்த பாணத்தை தன்னுடைய பலத்தோடு சிசுபாலனுடைய சரீரத்தில் விட்டான். ராஜகுமாரனான சிசுபாலன் அந்த பாணத்தால் அடிபட்டவனாய் பிரக்ஞையில்லாமல் பூமியில் விழுந்தான். இவ்வாறு ஸாத்யகி அந்த சிசுபாலனை ஜயித்து சந்தோஷமுள்ள மனதுடன் ஊருக்கு புறப்பட்டான். பிறகு மற்ற யாதவர்கள் அரசர்களின் சைனியத்தை ஜயித்து ஊருக்குப் புறப்பட்டனர். பலராமருடைய யுத்தத்திற்கு முன்பே ருக்மி முதலானவர்கள்

208703



ஸ்ரீகிருஷ்ணருடன் யுத்தத்திற்கு வந்தனர். ஏகலவ்யன் முதலானவர்களுடன் [illegible] ருக்மி ஸ்ரீகிருஷ்ணரிடம் வந்து பாண[illegible] செய்தான். ஸ்ரீகிருஷ்ணர் ஸிம்ஹம்போல் பின் திரும்பினார். அப்பொழுது அவர் தன்னுடைய பாணங்களால் மூன்று அக்ஷௌஹிணி ஸைனியத்தைக்கொன்று பாணங்களால் ஏகலவ்யனுடைய வாகனம் ஆயுதம் முதலியவைகளை நாசம் செய்தார். ஏகலவ்யன் அவனுடைய சரீரத்தை நாசம் செய்யக்கூடிய பாணத்தை ஸ்ரீகிருஷ்ணர் எடுத்ததைப்பார்த்து பயந்துபோய் அவரை விட்டு ஓடிப்போனான். தனுர்தாரிகளில் ஸ்ரேஷ்டனான ஏகலவ்யன் யுத்தத்தை விட்டு ஓடவும் தந்தவக்ரன் முதலான அரசர்கள் அந்த க்ஷணமே பயத்தால் ஓட்டம் பிடித்தனர். பிறகு ருக்மி பாணங்களாகிய உதகத்தை வ்ருஷ்டி செய்துகொண்டு கோபத்துடன் ஸ்ரீகிருஷ்ணரிடம் வந்தான். ஸ்ரீகிருஷ்ணர் சீக்கிரமே அவனுடைய வாகனத்தை நாசம் செய்தார். ருக்மியின் தனுஸ்ஸை சேதனம் செய்தார். மீண்டும் அந்த ருக்மி கத்தி கேடயம் இவைகளை எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணருடைய ரதத்திலேறினான். ஸ்ரீகிருஷ்ணர் பாதிசாண் நீளமுள்ள பாணங்களால் அவனுடைய கத்தியை சேதித்தார். சாமர்த்திய சாலியான ஸ்ரீகிருஷ்ணர் அந்த ருக்மியை ஆயுதமில்லாதவனாய்ச் செய்து ருக்மணி தேவியின் சொல்லை பரிபாலித்து அந்த ருக்மியை ஸம்ஹாரம் செய்யவில்லை. அவனை ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய இரதத்தின் த்வஜஸ்தம்பத்திற்கு கட்டி தலையில் ஐந்து பட்டையை எடுத்து அவனுக்கு ஐந்து குடுமியை வைத்து அந்த ருக்மியை விட்டு விட்டார். ஜகத்தின் தாய்தந்தையர்களான ரமா ரமாநாயகர்களான ருக்மணி கிருஷ்ணன் இவர்களுக்கு இந்த காரியம் செய்தது உலகவழக்கத்தை அனுசரித்தது தான். ரமாதேவியும் பகவானும் எப்பொழுதும் ஒரே மனதுள்ளவர்களாய் இருந்தாலும் மனுஷ்யர்களுக்கு கிருஹஸ்தாசிரம தர்மத்தை சிக்ஷித்துத் தருபவர்களாதலால் அந்த யுத்தபூமியில் ருக்மியை வைத்துக்கொண்டு அவர்கள் விளையாடினார்கள். பிறகு ஸால்வராஜன் பாணங்களை ஜலத்தைப்போல் வ்ருஷ்டி செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணரிடம் வந்தான். ஸ்ரீகிருஷ்ணர் ம்ருத்யுவுக்கு ஸமானமான பாணத்தை



ஸால்வராஜனுடைய ஹிருதயத்தில் போட்டார். அந்த பாணத்தாலடிபட்டு ஸால்வராஜன் சேஷ்டையின்றி விழுந்தான். வெகு நேரமானபின் ஸால்வராஜன் பிரக்ஞை அடைந்து ருத்திரனை சந்தோஷப்படுத்தவேண்டுமென்ற விருப்பத்துடன் காட்டிற்கு சென்றான். அந்த ஸால்வராஜன் பூமியில் யாதவர்களே இல்லாமல் செய்கிறேனென்று எல்லா அரசர்களின் எதிரில் ப்ரதிக்ஞை செய்து வனத்தில் மிக்க கடினமான தபஸ்ஸை செய்தான். பிறகு ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் ப்ரம்மாதி தேவோத்தமர்களால் துதிக்கப்பெற்றவராய் ருக்மணி தேவியுக்தராய் குசஸ்தலீ என்ற துவாரகா நகரத்திற்குள் ப்ரவேசம் செய்தார். ருக்மணியை அழைத்துவரும்முன் பலராமர் அவருடைய சேஷரூபத்திலேயும் அவருக்கு பாரியானாயிருந்த வாருணி என்றவளான ரேவதிதேவியை விவாஹம் செய்துகொண்டார். ரேவதிதேவியின் தந்தையான ககுத்மிராஜன் இந்த ரேவதியின் ரூபத்திற்குத் தகுந்த ரூபமுள்ளவனான அவளுடைய பூர்வஜன்மத்து பதியின்னாரென்பதை பிரம்மாவிடமிருந்து அறிய அபேக்ஷித்தான். அந்த ரேவதராஜனின் மகனான ககுத்மிராஜன் ப்ரம்மாவின் வரத்தாலேயே ப்ரம்மாவின் ஸபைக்குச் சென்று அங்கு நடைபெற்ற சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருந்து அச்சமயம் இருபத்தி ஏழு சதுர்யுகம் கடந்துபோனதை அறியவில்லை. மனுஷ்யர்கள் கேட்க அருகமில்லாததான தேவகானம் மனுஷ்யர்களை மோகிக்குமாதலால் ரைவதராஜன் மூர்ச்சையடைந்த சித்தமுள்ளவனானான். அவன் எழுந்தபின் சிறிதுகாலம்தான் கடந்துபோனதாய் அறிந்தான். அந்த ரைவதராஜன் பாட்டு முடியும்வரை மூர்ச்சை அடைந்து பிறகு ப்ரம்மாவால் எழுப்பப்பட்டவனாய்ப்ரம்மாவை என் மகளுக்கு பர்த்தா யார் என்று ப்ரச்னம் செய்தான். அப்பொழுது ப்ரம்மா இன்னமும் பலயுகமானபின் உன்மகளான ரேவதிக்கு பலராமர் பர்த்தாவாகிறார் என்று சொன்னார். அந்த ககுத்மிராஜனென்ற ரைவதராஜன் பலராமருக்கு ரேவதிதேவியை தானம் செய்து கந்தமாதன பர்வதத்திற்குச் சென்றான். அங்கு நல்ல தபஸ் செய்து விஷ்ணுவின் சமீபம் சென்றான். ஸத்யஸங்கல்பரான ப்ரபுவான பலராமர் கிருதயுகத்து ஜனங்களில்

அளவுக்கேற்றதாயுள்ள சரீரஸௌந்தர்யமுள்ள ரேவதிதேவியை தன் கலப்பையால் இழுத்து தனக்கு சமமாய் செய்துகொண்டார். மேலான காரியங்களுள்ள பலராமர் ரேவதி தேவியுடன் க்ரீடித்துக்கொண்டு முன்பு அர்யமா, அம்சன் என்ற இரண்டு சூரியனாயிருந்த சடன் உல்முகன் என்ற பெயர்கொண்ட இரண்டு பிள்ளைகளை உண்டாக்கினார். துஷ்ட ஜனங்களை சிக்ஷிப்பவரான ஸ்ரீகிருஷ்ணர் சுபதினத்தில் ஸ்ரீருக்மணிதேவியின் பாணிக்கிரஹணம் செய்துகொண்டார். அச்சமயம் துவாரகாவாசிகளான ஜனங்களுக்கு மகோற்சவமுண்டாயிற்று. பிரம்மருத்ராதி தேவர்கள் ஆகாயத்தில் நின்றுகொண்டு லக்ஷ்மியான ருக்மணியுடன் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ணரை ஸ்தோத்ரம் செய்தனர். முனிச்ரேஷ்டர்கள் தேவகந்தர்வர்கள் ஸித்தர்கள் சாரணர்கள் முதலியோர் யாதவர்களுடன் கலந்து லக்ஷ்மியும் லக்ஷ்மிபதியும் சேர்ந்த அந்த கல்யாண உற்சவகாலத்தில் நடமாடிவந்தனர். இதற்காக சொல்லி அனுப்பப்பட்டவர்களான பாண்டவர்களுடன் சேர்ந்த தேவாம்சர்களான ராஜர்கள் லக்ஷ்மீ ஸமேதரான ஸ்ரீகிருஷ்ணனைக்காண வந்தனர். ஸமஸ்த உலகங்களிலும் பரமஸுந்தரர்களாயுள்ள லக்ஷ்மீ லக்ஷ்மிபதியான ருக்மணி கிருஷ்ணன் இவர்கள் சேர்ந்திருப்பதைக் கண்டு ஸமஸ்த லோகங்களிலுள்ள ஸாது ஸஜ்ஜனங்கள் ஆனந்தமடைந்தனர்.

## சம்பராஸுர வதம்.

எப்பொழுதும் விட்டுப்பிரியாத ருக்மணிதேவியுடன் ஸ்ரீகிருஷ்ணர் க்ரீடித்திருந்து, அவருக்கு முன்பே பிள்ளையாயிருந்த மன்மதனை உத்தம புத்ரனாய் உண்டாக்கினார். வாஸுதேவன் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்னன் அநிருத்தன் என்று நான்கு ரூபங்களைக்கொண்ட ப்ரபுவான பகவானுடைய மூன்றாவது ரூபமான ப்ரத்யும்னரின் ஆவேசங்கொண்டதால் அந்த ருக்மணியின் மகன் ப்ரத்யும்னனென்று பெயர்பெற்றவனானான். பலிஷ்டனான அந்த ப்ரத்யும்னன் பிறப்பதற்கு முன்பு, ப்ரம்மாவின் துடையினின்றும் பிறந்த நாரதர், சம்பராஸுரனிடம்போய் ருக்மணியிடம்



ஸ்ரீகிருஷ்ணருக்கு பிறக்கும் மகன் உனக்கு மிருத்யுவாகப்போகிறானென்று சொல்லியிருந்தார். அதன்படியே ப்ரத்யும்னன் பிறந்த க்ஷணமே சம்பராஸுரனிடம் வந்து உனக்கு மிருத்யுவான குழந்தை பிறந்தானென்று சொன்னார். அப்பொழுது சம்பராஸுரன் மாயாவித்தையால் அந்த கிருஷ்ணரின் குழந்தையை ருக்மணியின் ப்ரஸவ அறையினின்றும் எடுத்துப்போய் ஆழமான கடலில் போட்டுவிட்டான். அப்பொழுது சக்ரபாணியான கிருஷ்ணர் சம்பராஸுரனைக் கொல்வதற்காக அச்சமயம் அவனிடம் உதாஸீனமாயிருந்தார். கடலில் போட்ட அந்த குழந்தையை அங்குள்ள ஓர் மீன் விழுங்கியது. அந்த மீன் அங்கு வலைவீசிய ஓர் செம்படவன் கையில் கிடைத்தது. செம்படவர்கள் அந்த மீன் வயிற்றில் ஓர் குழந்தை இருப்பதாய் அடையாளங்களால் கண்டுகொண்டு அந்த மீனை அவர்களின் அரசனான சம்பராஸுரனிடம் கொடுத்தனர். சம்பரன் மத்ஸ்யத்தின் வயிற்றைக் கிழித்து அதிரூபவானாயிருந்த அந்த குழந்தையை அவனுடைய வீட்டிலிருந்த மன்மதனுடைய பத்னியான மாயாவதியின் கையில் கொடுத்தான். மன்மதனுடைய பத்னி சம்பரனின் வீட்டிலிருந்ததற்கு காரணம் என்னவென்றால் முன்பு பரமசிவனுடைய நேத்ராக்னியால் மன்மதனின் சரீரம் சுட்டுப்போனபின் மன்மதனுடைய பாரியாளான ரதிதேவி ப்ரம்மாவின் சாபத்தால் சம்பராஸுரனின் வசமானாள். ஏனெனில் த்ரௌபதி என்பவளுக்கு ஐந்து புருஷர்கள் ஏற்படப்போகின்றனரென்று முன்பு ஒருசமயம் ப்ரம்மா சொல்லிவந்ததைக் கேட்டு இந்த ரதிதேவி பரிகாசம் செய்தாள். அப்பொழுது ப்ரம்மா கோபமடைந்து உன்னை ஒரு அஸுரன் கெடுக்கட்டுமென்று சாபம் கொடுத்தார். பிறகு ரதிதேவி மாயாவித்யையால் தன்னுடைய தேவதாரூபத்தை மறைத்துக்கொண்டு மாயாவதி என்ற ரூபத்துடன் சம்பராஸுரனிடம் வந்து சேர்ந்தாள். இந்த ரதி சம்பரனின் வீட்டிலிருந்தாலும் இவள் தன் தேவதா ஸ்வரூபத்துடன் சம்பராஸுரனுடன் ஸங்கமம் செய்யவில்லை. மாயாவதியான அந்த ரதி தன் புருஷனான அந்த ப்ரத்யும்னனைக்கண்டு சந்தோஷமடைந்தாள். நெய், பால் முதலான ரஸாயனங்களை குழந்தை

யான தன் பர்த்தாவுக்கு கொடுத்து அவனை வளர்த்தான். குழந்தையான ப்ரத்யும்னன் நான்கு வருஷங்களில் பரிபூர்ணமான யௌவனமடைந்தான். பூர்ணயௌவனமுள்ள ப்ரத்யும்னனைக் பார்த்து மாயாவதி லஜ்ஜையைக் காட்டினாள்: ப்ரத்யும்னன் இதைக் கண்டு அம்மா! உனக்கு எப்படி இந்த குச்சிதமான காரியம் ஏற்பட்டதென்று கேட்டான். அப்பொழுது ரதிதேவி தன் புருஷனை ப்ரத்யும்னனிடம் அவன் பிறந்தது, அவன் இங்கு வந்து சேர்ந்தது முதலான விருத்தாந்தங்களைச் சொன்னாள். பிறகு கிருஷ்ணபுத்ரனான ப்ரத்யும்னன் அந்த ரதிதேவி தன் தாய் என்றெண்ணியிருந்ததை விட்டு அவள் தன்னுடைய பத்னி என்று ஏற்றுக்கொண்டான். அந்த மாயாவதி ரூபங்கொண்ட ரதிதேவி கிருஷ்ணபுத்ரனான ப்ரத்யும்னனுக்கு எல்லா மாயாவிகளையும் நாசம் செய்யும் பரசுராமரை தேவதையாகக்கொண்ட உத்தமமான மந்த்ரத்தை உபதேசம் செய்தாள். பிறகு மன்மதனுடைய அம்சனான ப்ரத்யும்னன் தன்னுடைய பத்னியான மாயாவதியைக்கெடுத்த சம்பராஸுரனை யுத்தத்திற்கழைத்தான். சம்பராஸுரன் யுத்தத்திற்கு வந்து பலிஷ்டனாய் சக்தி ஆயுதத்துடன் ப்ரத்யும்னனுடன் யுத்தம் செய்தான். அவன் கத்தி கேடயம் தரித்த ப்ரத்யும்னனுடன் உத்தமமான அஸ்திரங்கள் ஆயுதங்கள் விருக்ஷங்கள் இவைகளைக்கொண்டு யுத்தம் செய்ய சற்றும் முடியவில்லை. பிறகு சம்பராஸுரன் மாயா வித்தையால் கண்ணிற்படாமல் மறைந்தான். கிருஷ்ண புத்ரனான ப்ரத்யும்னனும் மறைந்தான். ஆயிரம் மாயைகளைக்கொண்டவனும் க்ரூரனும் ஆகாயத்தினின்றும் பர்வதங்களை வர்ஷிப்பவனுமான அந்த சம்பராஸுரனிடம் வந்து பரசுராமரை தேவதையாகக்கொண்ட வித்யையால் அந்த சம்பராஸுரனை ஸம்ஹாரம் செய்தான். அவன் பரசுராம தேவதாகமான வித்யையால் அவனுடைய ஆயிரம் மாயா வித்தைகளும் தொலைந்துபோய் உத்தமமான கத்தியால் ப்ரத்யும்னனால் சேதிக்கப்பட்ட கழுத்துடன் அவனமே விழுந்தான். அந்த கிருஷ்ண புத்ரனான ப்ரத்யும்னன் சம்பராஸுரனைக்கொன்று அந்த பரசுராம தேவதாகமான மந்திரத்தாலே ஆகாயம்போய் பத்னியான ரதிதேவியுடன் கூடி த்வாரகைக்கு



வந்து சேர்ந்தான். ஸர்வக்ஞர்களும் ஸாமானிய ஜனங்களைப்போல் நடித்துக் காட்டுபவர்களுமான அந்த ருக்மணி கிருஷ்ணர் இவர்களிடம் நாரதர் வந்து இவன் உங்கள் மகன் ப்ரத்யும்னன் என்று சொன்னார். ப்ரத்யும்னன் தாய் தந்தையர்களான ருக்மணி கிருஷ்ணர் இவர்களாலும், பலராமருடன் கூடிய யாதவர்களாலும் பாட்டனான வஸுதேவனாலும் அன்புடன் சீராட்டப்பட்டவனாய் ஸுகமாய் வாஸம் செய்தான்.

---

## ஸத்யபாமா விவாகம்.

ப்ரத்யும்னன் வரும்முன் ஸத்ராஜித் என்ற யாதவன் எப்பொழுதும் ஸூர்ய மண்டலத்திலுள்ள நாராயணனை பூஜித்துக் கொண்டு ஸூர்யமண்டலாந்தர்கத நாராயணனிடமிருந்து ஸ்யமந்தக மாணிக்யத்தைப் பெற்றார். ஸமர்த்தனான ஸ்ரீகிருஷ்ணன் இந்த ஸத்ராஜித் எப்பொழுதும் விஷ்ணுத்யானம் செய்துகொண்டிருப்பினும் மனதில் மகா லோபத்தைக்கொண்டிருக்கிறானென்று ப்ரகடனம் செய்வதற்காக தனது அந்த ஸ்யமந்தக மாணிக்யம் வேண்டுமென்று ஸத்ராஜித் ராஜனை யாசித்தார். ஸத்ராஜித் ராஜன் லோபத்தால் அந்த மணியை ஸ்ரீகிருஷ்ணருக்குத் தரவில்லை. பிந்தி ஸத்ராஜித் ராஜனின் தம்பியான ப்ரஸேனஜித் ராஜன் அந்த ஸ்யமந்தகமாணிக்யத்தை கழுத்தில் போட்டுக்கொண்டு வனத்திற்கு சென்றான். போன இடத்தில் ப்ரஸேனஜித்ராஜன் ஓர் ஸிம்ஹத்தால் கொல்லப்பட்டான். அப்பொழுது ஸத்ராஜித்ராஜன் தன் தம்பியான ப்ரஸேனஜித்தை ஸ்ரீகிருஷ்ணர் கொன்றுவிட்டாரென்று ஏகாந்தமாய்ச்சொன்னான். அந்த விருத்தாந்தத்தை ஸ்ரீகிருஷ்ணர் கேட்டு யாதவர்களைக் கூட்டிக்கொண்டு ப்ரஸேனஜித் போனவழியாய்ப் போனார். அவ்வனத்தில் ப்ரஸேனஜித்தின் குதிரைக் காலடிச்சுவடுகளையும் பிந்தி ஸிம்ஹத்தின் காலடிச்சுவடுகளையும் ப்ரஸேனஜித் ஸிம்ஹத்தால் ப்ராணன் விட்டதையும் யாதவர்களுக்குக்காட்டி பிறகு கரடியால் கொல்லப்பட்டுப் போன ஸிம்ஹத்தையும் ஸ்ரீகிருஷ்ணர் யாதவர்களுக்கு காட்டினார். பிறகு யாதவர்களை ஓர் குகையின் வெளிவாசலில் நிறுத்தி

ஜாம்பவான் வசிக்கும் அந்த குஹைக்குள் நுழைந்தார். அந்த குஹையில் ஜாம்பவானுக்கும் கிருஷ்ணருக்கும் யுத்தம் நடந்தது. ப்ரபுவான கிருஷ்ணர் ஜாம்பவான் தன்னுடைய பக்தனென்று முதலில் மெதுவாய் யுத்தம் செய்தார். பிறகு தன்னுடைய ஸ்வரூபத்தை ஜாம்பவானுக்கு வெளிக்காட்ட க்ரூரமான யுத்தம் செய்தார். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரின் குத்தடியால் ஜாம்பவானுடைய சரீரம் சக்கலாய்ப்போய் ஜாம்பவான் பெரிய ஆபத்தை அடைந்து அவனுடைய ஸ்வாமியான ரகுநாயகனை ஸ்ரீராமசந்திரனை மனதால் ஸ்மரணை புரிந்தான். ஸ்ரீராமன் ஸ்மரணைக்கு வந்த க்ஷணமே எல்லா அவதாரங்களிலும் பேதமில்லாததான ஸ்ரீராம ரூபத்தை ஜாம்பவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் தரிசித்து அந்த ராமச்சந்திரன்தான் ஸ்ரீகிருஷ்ணரென்றறிந்தான். பிறகு ஜாம்பவான் கிருஷ்ணரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சீக்கிரமே அவருடைய காலில் விழுந்து மங்களத்தை தருபவளான ரோஹிணி என்று பெயர்கொண்ட ஜாம்பவதி தேவியான தன் மகளை அவருக்கு கன்னிகாதானம் செய்துகொடுத்து ஸ்யமந்தக மாணிக்யத்தை வரதக்ஷிணையாய்க் கொடுத்து ஸ்ரீகிருஷ்ணரை ஸ்தோத்திரம் செய்தான். பிறகு ஸ்ரீகிருஷ்ணர் ஜாம்பவானுடைய மிக்க நைதலத்துப்போன சரீரத்தை அவனுக்கு வலி ஏற்படாமல் சக்ராயுதத்தால் பிளந்து சீக்கிரத்தில் அவனை யௌவனசரீரமுள்ளவனாய்ச்செய்தார். பக்தனான ஜாம்பவானுடைய இஷ்டத்தை பூர்த்திசெய்து ஸ்ரீகிருஷ்ணர் ஜாம்பவதியுடன்கூடி அந்த ஸ்யமந்தகமாணிக்யத்தை எடுத்துக்கொண்டு குஹாத்வாரத்தினின்றும் புறப்பட்டார். ஸ்ரீகிருஷ்ணர் குஹைக்குள்போய் வெளிவராமலிருக்கவும் பலநாட்கள் யாதவர்கள் அவரை எதிர்பார்த்திருந்து பிறகு த்வாரகாபட்டணம் போய்விட்டனர். அந்த யாதவர்கள் அப்போது திரும்பிவந்த ஸ்ரீகிருஷ்ணரைப்பார்த்து சந்தோஷப்பட்டனர். யாதவஸ்ரேஷ்டனான ஸ்ரீகிருஷ்ணர் எல்லா யாதவர்களில் முன் ஸத்ராஜித்ராஜனுடைய கையில் ஸ்யமந்தக மணியைத்தந்தார். ஸத்ராஜித் உடனே காந்திமிழந்தான். அவன் ஸ்ரீகிருஷ்ணர் இந்த மணியை திருடினரென்று அவரிடம் திருட்டுத்தனமாகிய அபகீர்த்தியை பொய்யாகச் சொல்லியதால் பச்சாத்தாபமடைந்து தன் குற்றம் நீங்க விரும்பி அவனுடைய மகளான ஸத்யபாமாதேவியை ஸ்ரீகிருஷ்ணருக்கு தானம் செய்தான்.

(தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி.)

---

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பாராவ், M.A., அவர்கள் எழுதுவதாவது:—

நிர்குண ப்ரம்மம் முக்யவிருத்தியால் வேதப்ரதிபாத்யமல்லவென்று மட்டில் சொல்லி சாம்பசிவ சாஸ்திரிகள் பேசாமலிருக்கவில்லை. அவருக்கு நிர்குணப்ரம்மத்தைக்கண்டு மாத்வர்களைவிட அதிக கோபம்போலிருக்கிறது. ஒவ்வொரு மாத்வனும் நெற்றியில் சிறிது சிறிது கரியைத் தீர்த்திக்கொண்டிருக்கிறான். சாஸ்திரிகளோ எல்லா மாத்வர்களின் நெற்றியிலுள்ள எல்லா கரிகளையும் வழித்தெடுத்து தன் முகம் பூராவும் தீர்த்திக்கொண்டு வீரவைஷ்ணவராகி குற்றுயிராய்க்கிடக்கும் நிர்குண ஜீவப்ரம்மைக்யத்தை ஸம்ஹாரமே செய்துவிட்டார். எப்படியெனில் அரண்மனையில் தர்பார் செய்துவரும் மகாராஜாவைப்போல் வேதத்தில் முக்ய விருத்தியால் நிர்குணப்ரம்மம் காணப்படாமல் எங்கேயோ ஓர் மூலையில் அடங்கி ஒடுங்கி சங்கடப்பட்டுக்கொண்டிருப்பதைப்பார்த்து சங்கராசார்யார் அந்த நிர்குணப்ரம்மத்துக்கு ஓர்மருந்து மாளிகையில் சிறிது இடத்தைத்தந்து இங்கு சற்று இரு என்றார். அப்படியென்றால் நிர்குணப்ரம்மம் முக்ய விருத்தியால் வேதப்ரதிபாத்யனாய் இல்லாமலிருந்தாலும் பாதகமில்லை, லக்ஷணையால் அவர் வேதப்ரதிபாத்யனாகிறான் என்றார். சாம்பசாஸ்திரிகளுக்கோ மாத்வர்களின் சகவாஸத்தால் வீரவைஷ்ணவத் தன்மை வந்துசேர்ந்து அந்த மருந்து மாளிகைக்கே நெருப்புவைத்துவிட்டார், நிர்குணப்ரம்மவாதம் சாய்ந்து மடிந்துபோய்விட்டது. பாருங்கள். சாஸ்திரிகள் சொல்லும் வெட்டவெளிச்சமான வார்த்தைகள்: "ப்ரம்மம் லாக்ஷணிகவிருத்தியாலுங்கூட விஷயமாவதில்லை. அப்படியானால் ப்ரம்மம் ஸவிசேஷணமானதால் அத்வைதத்திற்கு ஹானியே உண்டாகிறது" என்று ஆக்ஷேபித்திருக்கின்றனர். இது சாஸ்திரமறியாத வஜ்ஜிர சம்பர்களின் வார்த்தைதானாகும். விசேஷணத்திற்கும் உபலக்ஷணத்திற்கும் மேருமந்தரத்தைப்போல் தாரதம்யமுண்டு. உபலக்ஷணங்களான பதார்த்தங்களெல்லாம் ப்ரம்மபரிசாயகங்களாய் ஆகுமேயல்லாது பரம்மவிசேஷணங்களாக ஆகமாட்டாது. ஆதலால் ப்ரம்மத்தின் நிர்விசேஷத்வத்திற்கு ஹானி இல்லை" என்கிறார். ஐயா இந்த வார்த்தை வஜ்ஜிரசம்பனுடைய வார்த்தையல்ல பச்சைக் குழந்தையின்

காதுக்கினிமையான மழற்சொல். இது புத்தி வறட்சையின் வெளியீடு தான், இதை கவனியுங்கள்.

(1) ஹாதி ஆசாரியார் பிரம்மம் லக்ஷணாவிருத்தியால் விஷயனாகும்பக்ஷத்தில் ஸவிசேஷணமாய் ஆவதால் அத்வைதஹானி ஏற்படுகிறது. ஆகையால் லக்ஷணாவிருத்தியாலும் அவன் விஷயனாகிறதில்லை. என்று சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். (2) சாம்பசாஸ்திரிகள் பிரம்மம் லக்ஷணாவிருத்தியால் விஷயனாகும்பக்ஷத்தில் ஸவிசேஷணனாய் ஆவதில்லை. ஸோபலக்ஷணமாய் அதாவது லக்ஷணங்களைக்கொண்டவனாய் ஆகிறான். ஆகவே அத்வைதஹானி ஏற்படுவதில்லை. ஆதலால் லக்ஷணாவிருத்தியாலும் ப்ரம்மம் விஷயனாகமாட்டானென்று தாராளமாய் மானியம் விட்டுவிட்டார்.

இப்படி சாஸ்திரிகள் மானியம் விட்டதால் சங்கராசாரியாரின் கக்ஷியை சாஸ்திரிகள் கெடுத்துவிட்டாரென்றே சொல்லவேண்டும். எதிர்கக்ஷிக்காரனிடம் லஞ்சம் வாங்கிவிட்டு தன் கக்ஷிக்காரனின் கக்ஷியை பாழாக்கும் த்ரோஹியான வக்கிலைப்போல், சாம்பசாஸ்திரிகள் கக்ஷிக்குவராத ஓர் வைலக்ஷண்யத்தை முதலில் காட்டி அது யுக்தியால் அடிபட்டுப்போய் பிரம்மத்திற்கு லக்ஷணையால் ப்ரதிபாத்யத்வமில்லை என்ற நிலைமையைக்கொண்டுவந்து விட்டுவிட்டார். இது ஹாதீ ஆசாரியாரின் ஸஹவாஸபலத்தால் ஏற்பட்டதென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஹாதீ ஆசாரியாரும் இவரும் ஒன்றுகூடிப்பேசி அத்வைதத்தைத்தொலைக்க சூழ்ச்சி செய்திருக்கிறார்களெனவேண்டும் ஆசாரியார் வெளியே நின்று அத்வைதத்தின்மீது வெடிகுண்டுகளைப் போடுகிறார். சாஸ்திரிகள் உள்ளே நின்று தூர்பலஸ்தானங்களைக் காட்டுகிறார். சாம்ப சாம்பசாஸ்திரிகளின் கக்ஷி எப்படி இருக்கிறதென்றால் ஹாதி ஆசாரியார் உம்முடைய ப்ரம்மம் பகலில் பிரதிதினம் கொள்ளையடிப்பதால் அவன் திருடனென்று சொன்னதற்கு சாம்பசாஸ்திரிகள் எதிர்கக்ஷிக்காரரிடம் லஞ்சம்பெற்று என் ப்ரம்மம் நடுநிசியில் ஒருவர் பார்க்காதபடி அடுத்த வீட்டில்மட்டில் கன்னம் வைக்கிறானாதலால் அவன் திருடனாகமாட்டான். பகலில் கொள்ளையடிப்பதற்கும் இரவில் கன்னம் வைப்பதற்கும் மேருமந்தரம்போல் வித்யாஸமிருக்கிறது; வஜ்ஜிரசும்பரான உமக்கு இது தெரியாதென்று சொல்லி ஹாதீ ஆசாரியாரை வெளிக்குமட்டில் நிந்தித்து அவருடைய கக்ஷியை ஆதரித்ததாயாகிறது. ஏதோ சாஸ்திரிகள் பிரமாதமாய் ஹாதீ ஆசாரியாருக்கு பதில் சொல்லிவிட்டாரென்றும் த்வைதம் கீழே விழுந்துவிட்டதென்றும் அத்வைதம் அத்விதீயமான நிலைமைக்கு ஏறிவிட்டதென்றும் அத்வைதிகள் எண்ணியிருக்கின்றனர். நிதானமாய் கவனித்தால் சாஸ்திரிகள் ஹாதீ ஆசாரியாருக்கு கைகொடுத்திருப்பது நன்கு விளக்கும். கவனியுங்கள். உபலக்ஷணமென்றால் விசேஷணமேயாகும். விசேஷணமென்றாலோ உபலக்ஷணமேயாகும். இப்படியிருக்க ப்ரம்மம் உபலக்ஷணத்துடனிருந்தால் ஸவிசேஷணமாகாதென்று சொன்னதோடு உபலக்ஷணத்திற்கும் விசேஷணத்திற்கும் மேருமந்தரத்தைப்போல் வித்யாஸமிருப்பதாயும் ஹாதீ ஆசாரியார் இதை அறியாத வஜ்ஜிரசுண்டரென்றும் சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார். விசேஷணமென்றால் எல்லா காலத்திலேயும் லக்ஷ்யத்தின் ஸம்பந்தமுள்ள வ்யாவர்த்தக தர்மம். உபலக்ஷணமென்றாலோ ஸ்வல்பகாலம் லக்ஷ்யஸம்பந்தமுள்ள வ்யாவர்த்தக தர்மம். ஸர்வகாலத்திலேயும் லக்ஷ்யஸம்பந்தமுள்ள தர்மங்களை உங்கள் ப்ரம்மத்திற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால் நீங்கள் சொல்லும் நிர்விசேஷ ப்ரம்மவாதம் தொலைந்துபோகுமென்று ஹாதீஆசாரியார் எடுத்துச் சொன்னது. அதற்கு சாஸ்திரிகள் ஸ்வல்பகாலம் லக்ஷ்யஸம்பந்தமுள்ள தர்மங்களை ஒப்புக்கொள்வதால் எங்கள் நிர்விசேஷ ப்ரம்மவாதத்திற்கு ஹானி இல்லை என்று மடையர்களும் சிரிக்கும்படி அபத்தவாக்யார்த்தத்தை ஆடியிருக்கிறார். விசேஷணமும் தர்மமே; உபலக்ஷணமும் தர்மமே; ஆகவே ப்ரம்மம் லக்ஷணாவிருத்தியாலும் விஷயனாகமாட்டான். ஆதலால் அவன் ஒருக்காலும் வேதப்ரதிபாத்யனாகமாட்டான். ஆகவே லக்ஷணையால் ப்ரதிபாத்யத்வமென்ற தர்மமும் ப்ரம்மத்திற்கில்லை. என்று சாஸ்திரிகளும் வாக்குமூலம் கொடுத்ததாயாகும். சாம்பசாஸ்திரி வீரவைஷ்ணவராகமாறி நிர்குணப்ரம்மத்தை வேதமாகிய ஸிம்ஹாஸனத்தினின்றும் வெளியே தள்ள மறுபடியும் நிர்தர்மகனாகிய சத்ரு வந்து வைஷ்ணவர்களுக்கு தொந்தரவுகொடுத்தால் என்ன செய்கிறதென்று நிர்குண ப்ரம்மவாதத்தைக்கொளுத்தி சாம்பலாக்கி இதை தன்னைச்சேர்ந்த வேறு சாஸ்திரிகள் யாராவது கண்டு தன் துரோகத்தை அறிந்தாலென்ன செய்கிறதென்று ஹாதீ ஆசாரியாரை நிந்திக்கிறார். அமூல்யமான வைரங்களை தானம் செய்பவர் இரண்டடி அடித்தாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஹாதீ ஆசாரியாரே! சாம்பசாஸ்திரிகளின்மீது கோபிக்காதீர்கள். சாஸ்திரிகள் நிர்குணப்ரம்மவாதம் (அதாவது அத்வைதம்) அவைதிகமென்றே உபபாதனம் செய்து காட்டிவிட்டார். எப்படியெனில் ப்ரம்மமென்பது வேதத்தில் வசனவிருத்தியாலாவது அல்லது லக்ஷணாவிருத்தியாலாவது சொல்லப்பட்டிருக்கவேண்டும். வேறு விருத்தி



208703
சென்னை-600

களோ இல்லை. முதலாவதான வசனவிருத்தியால் வேதத்தில் நிர்குணப்ரம்மவாதம் சொல்லப்படவில்லை என்று சங்கராசாரியார் சொல்லிவிட்டார். வைஷ்ணவர்களின் ஸித்தாந்தத்தை நாடும் ஸாம்பசாஸ்திரிகளோ இரண்டாவதாகிய லாக்ஷணிகவிருத்தியாலும் நிர்குணப்ரம்மம் வேதத்தில் சொல்லப்படவில்லையென்று யுக்திபூர்வமாய்க் காட்டிவிட்டார். வேதபகிஷ்கிருதனை நிர்குணப்ரம்மம் ஐசுவரியமிழந்து ப்ரபலனான சத்ருவால் பிடிக்கப்பட்ட அரசனைப்போல் மரணத்தையே அடைந்துவிட்டான். இவ்வளவு விஷயத்தையும் த்வைதிகளின்மீதுள்ள வாத்ஸல்யத்தால் சிரமப்பட்டு நிறைவேற்றிக்கொடுத்த சாஸ்திரிகள் ஆத்மஸம்ரக்ஷணார்த்தம் ஹரதீ ஆசாரியாரை தூஷித்திருக்கிறாராயினும் நிர்குணப்ரம்மவாதம் அவைதிகமென்று வைர எழுத்துக்களால் தங்கப்பலகையில் பதிராந்தமாய் எழுதிவிட்டார். இவ்வாறு நிர்குணப்ரம்மத்தை வேதத்தினின்றும் வெளியே துரத்திவிட்டு பிறகு அதன் விஷயத்தில் "ஏதத் அப்ரமேயம், அஸ்தூலம், அநணு, அஹ்ரஸ்வம், அதீர்க்கம், அஸங்கம், அசக்ஷுஷ்கம், அவாக், அமன; அதேஜஸ்கம்." என்றிவ்வாறு சுருதிகளை உதாஹரித்திருக்கிறார். இது பொருத்தமாகவில்லை. முன்பு முதலாய ராஜாங்கத்தில் சக்ரவர்த்தி இறந்துபோய் கிடந்தால் அவன் இறந்த ஸமாசாரம் ஜனங்களுக்கு அவ்வளவு சீக்கிரம் தெரியலாகாதென்று அந்த ராஜாங்க மந்திரி அரண்மனைவாயிலில் நின்று வெளியே எல்லோர் காதிற்படும்படி அந்த சக்ரவர்த்தியின் நாமாவளிகளைச் சொல்லிக்கொண்டிருந்தானும். சாஸ்திரிகள் சொல்வது அப்படித்தான் இருக்கிறது. நிர்குணப்ரம்மம் முக்யவிருத்யாலாகட்டும் லக்ஷணாவிருத்தியாலாகட்டும் வேதப்ரதிபாத்யனன்லவென்று காட்டிவிட்டு அது அஸ்தூலம் அனணு அஹ்ரஸ்வம் அதீர்க்கம் என்று அடுக்கடுக்காய்ச் சொல்லிப்போவதால் என்னப்ரயோஜனம்? இந்த சுருதியானை ப்ரதிபாதனம் செய்கிறதென்கிறோம். அது நிர்குணனைச்சொல்லாது. ஏனென்றால் நிர்குணனுக்கு இருவகை விருத்தியாலும் ப்ரதிபாத்யமில்லை. ஸகுணனுமல்ல. ஏனெனில் அவனிடம் அத்வைதமதப்படி அஸ்தூலத்வம் முதலான குணங்கள் ஆதாரமில்லாமல் அம்பலத்தில் நிற்கின்றன. ஆகவே இந்த சுருதிகளை உதாஹரித்திருப்பது அஸங்கதமேயாகும். இது பிறரை ஏமாற்றுவதற்குத்தான் எனவேண்டும். இப்படித்தான் ஓர் அமெரிக்கா நூலாசிரியர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்:-

(தொடரும்.)



# ப்ரமாண சந்திரிகை.

(முன் தொடர்ச்சி.)

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் எம். ராமராவ் எழுதிவந்தாவது:—

மேற்கண்டவாறு கேவல ப்ரமாணமாகிய யதார்த்த ஞானத்தை நாம் நான்கு வகையாகப் பிரித்திருப்பதுபோல் பிரிக்காமல் (1) இந்திரியங்களினால் பிறக்கும் ஞானம் (2) அனுமானத்தினால் பிறக்கும் ஞானம் (8) ஞாபகம் (4) ரிஷி ஞானம் என நான்கு வகையாகச் சிலர் பாகுபாடு செய்திருக்கின்றனர். இது தவறாகும். ஏனென்றால் ஞானவகையைச் சேர்ந்ததாயும் பிறக்காமலே அநாதியாய் விளங்கிவருவதாயுமான ஈசுவர ஞானம் வேதங்களினால் பிறக்கும் ஞானமும் இப்பிரிவினையில் சேரவில்லை. மேலும் 'ஞாபகம்' என்ற ஞானம் மனஸ் என்ற இந்திரியத்தாலே உண்டாவதால் இதை 'இந்திரியத்தாலுண்டாவது' என்ற பிரிவிலேயே சேர்த்துவிடலாம். ரிஷி ஞானமும் யோகமஹிமையுடன் கூடிய இந்திரியங்களாலேயே பிறப்பதால் இதையும் முதல் தலையங்கத்திலேயே சேர்க்கலாம். தனித்தனியான பிரிவுப்படுத்த அவசியமே இல்லை.

(8) அனுப்ரமாணம்:— கேவலப்ரமாணத்திற்கு அதாவது யதார்த்த ஞானத்திற்கு ஸாதனமாயிருப்பது அனுப்ரமாணமாகும். ஓர் காரியம் நிறைவேறுவதற்குத்தேவையான ஸாமக்ரிகளில் எந்த ஒன்று இல்லாவிட்டால் காரியம் நிறைவேறாதோ எது இருந்தால்தான் ப்ரதிபந்தகம் இல்லாதிருக்கையில் காரியம் நிறைவேறுமோ அதற்குத்தான் ஸாதனம் என்று பெயர். கோடரி மரம்வெட்ட ஸாதனம். ஸாதனம் என்பது அஸாதாரணமான காரணமாகும். எது இல்லாவிட்டால் காரியம் வேறுவிதமாக உண்டாகாதோ எது எப்போதுமே காரியம் உண்டாவதற்கு முன்னமே இருக்கிறதோ அதுவே காரணம் எனப்படும். இந்தக் காரணம் (1) உபாதான காரணம் என்றும் (2) நிமித்தகாரணம் என்றும் இரண்டுவகைப்படும். எது பரிணமித்தது (மாறுதல்)

யடைந்து காரணமாக இருக்கிறதோ அது உபாதான காரணம் எனப்படும். உதாஹரணம் பிரகிருதி இந்த ஜகத்துக்கும், பால், தயிருக்கும், மண் குடத்திற்கும், தங்கம் காப்பு முதலிய ஆபரணங்களுக்கும், உபாதான காரணங்கள். மேற்சொன்னவாறு பரிணமிக்காமல் காரணமாயிருக்கிறதோ அது நிமித்த காரணமாகும். உதாரணம் குயவனுடைய தண்டம் குடத்துக்கும், புண்ய பாபாதிகள் இந்த ஜகத்துக்கும் நிமித்த காரணங்கள்.

அநுப்ரமாணம் (1) ப்ரத்யக்ஷம் (2) அநுமானம் (3) ஆகமம் என்று மூன்று வகைப்படும். ப்ரத்யக்ஷம் பெரும்பாலும் சமீபத்திலுள்ளதும், மறைக்கப்படாததும் நிகழ்கால சம்பந்தமானதுமான சில பொருளையே கிரஹிக்கவல்லது. அநுமானம் தூரத்திலுள்ளதும் இறந்தகால எதிர்கால சம்பந்தமானதும் மறைவிலுள்ளதுமான விஷயங்களை கிரஹிப்பது. ஆகமமோ மற்ற இரு ப்ரமாணங்களின் உதவியில்லாமலேயே ஸ்வதந்திரமாக எல்லா விஷயங்களையும் கிரஹிக்கும். இம்மூன்றினால் பிறக்கும் ஞானமும் முறையே ப்ரத்யக்ஷம் (ஸாக்ஷாத்காரம்) அநுமிதி சாப்தம் என்று சொல்லப்படும்.

(9) ப்ரத்யக்ஷம்.— மனதுடன் சம்பந்தப்படாதிருத்தல் காசம், காமாலை முதலிய தோஷங்களில்லாத இந்திரியம்தான் ப்ரத்யக்ஷம் எனப்படும். அல்லது இவ்வித தோஷமில்லாத இந்திரியத்துக்கும் அதிதூரத்திலிருத்தல் அதிஸமீபத்திலிருத்தல் ஸூக்ஷ்மமாயிருத்தல், மறைவிலிருத்தல், வெளிப்படையாகத் தோன்றாமலிருத்தல், ஒற்றுமை (இன்னொரு வஸ்துவைப்போலிருத்தல்) ஆகிய தோஷங்களில்லாத பொருளுக்கும் ஏற்படும் சேர்க்கை ப்ரத்யக்ஷம் எனப்படும். மேற்கண்ட தோஷங்களில் ஏதாவதொன்று இருந்தால் சிலசமயத்தில் ஞானமே உண்டாகாது. சிலசமயத்தில் ஸம்சயம், விபரீத ஞானம் முதலியன ஏற்பட்டுவிடும். ஓர் இந்திரியத்தால் ஒரு பொருளின் ஞானம் உண்டாகவேண்டுமானால் இந்திரியம் என்பது காரணம் (ஸாதனம்), அதற்கும் பொருளுக்குமுள்ள சேர்க்கையானது அவாந்திர வ்யாபாரம், ஸாக்ஷாத்காரம் என்பது பலன் என்று அறியவேண்



டும். மேலும் நம்முடைய ஆத்மாவானது மனதோடும், மனது இந்திரியத்தோடும், இந்திரியம் பொருளோடும் சம்பந்தப்பட்டால் தானம், ஞானம் உண்டாகும். இந்நான்கின் சம்பந்தமில்லாவிடில் ஞானம் உண்டாகாது. [ஆத்மா மனஸா ஸம்யுஜ்யதே; மன இந்திரியேண; இந்திரியம் அர்த்தேன.]

இந்த ப்ரத்யக்ஷமானது (1) ஸாக்ஷீ (சேதனனின் ஸ்வரூப இந்திரியம்) (2) மூக்கு (3) நாக்கு (4) கண் (5) த்வக் (தோல்) (6) காது (7) மனஸ் என்று ஏழுவகைப்படும்

ஸாக்ஷிக்கு அதன் ஸ்வரூபமும், அதன் சுகம், துக்கம் முதலிய தர்மங்களும், பாவரூபமான அக்ஞானமும், மனஸ்ஸும் மனோவிருத்தியான ஞானம் சுகம் முதலியவைகளும் காலமும் அவ்யாகிருத ஆகாசமும் (இடைவெளி) இவை முதலியனவும் விஷயமாகும். இது ஸ்வரூப ஞானத்தை வெளிப்படுத்தும்.

மூக்குக்கு வாஸனையும், அதன் வகுப்பைச்சேர்ந்த நல்வாஸனை, துர்வாஸனை முதலியனவும் விஷயமாகும். நாக்குக்கு ரஸமும் அதன் விசேஷங்களாகிய இனிப்பு துவர்ப்பு முதலியனவும் விஷயமாகும். கண்ணுக்கும் த்வக் என்ற இந்திரியத்துக்கும் *

* வாயுவின் ஸ்பரிசம்தான் த்வக் என்ற இந்திரியத்துக்கு விஷயமே ஒழிய வாயுவே விஷயமல்ல. வாயுவை அதன் ஸ்பரிசத்தால் அநுமானித்து அறியவேண்டும். எப்படியெனில் காற்று வீசும்போது மிதசீதோஷ்ணமான ஓர் ஸ்பரிசம் நம்மீது படுகிறது. இந்த ஸ்பரிசம் ஒரு பதார்த்தத்தைவிட்டுத் தனியே இருக்கமுடியாது. ஆகையால் பிருதிவி, அப்பு (ஜலம்) தேஜஸ் (அக்னி) வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனஸ் என்ற ஒன்பது பதார்த்தங்களில் ஏதோ ஒன்றில் இருக்கவேண்டும். முதலாவதாக ப்ருதிவியாய் இந்த ஸ்பரிசம் இருக்கமுடியாது. ஏனென்றால் பிருதிவியின் ஸ்பரிசம் ரூபமுடையது. இந்த ஸ்பரிசமோ ரூபமற்றது. அப்பு (ஜலம்) தேஜஸ் (அக்னி) ஆகிய இரண்டுமல்ல. ஏனென்றால் இந்த ஸ்பரிசம் சீதம், உஷ்ணம் இரண்டாயுமிருக்கிறது. மேலும் ஆகாசம், காலம், திக்கு ஆத்மா என்ற நான்குமல்ல. ஏனென்றால் இவை எங்கும் வ்யாப்தமாயிருப்ப

பெரிய, உருவமுள்ள பதார்த்தங்களும், சில குணங்களும் எண்ணிக்கைகளும், கர்மங்களும் ஜாதிகளும் விஷயங்களாக உள்ளன. காதுக்கு சப்தமும் அதன் விசேஷமான வர்ணாத்மக சப்தம், த்வன்யாத்மக சப்தம் இவை விஷயமாகவுள்ளன. மனதுக்கு மேற்சொன்ன ஐந்து இந்திரியங்களுக்கும் விஷயமாயுள்ள எல்லாம் அவை. அவைகளின் மூலம் விஷயமாகும். மேலும் இந்த ஐந்து இந்திரியங்களின் உதவியன்னியில் இறந்த காலத்தைச் சேர்ந்த பொருள்களும் விஷயமாகும். இந்த மனதைக் கரணமாகக்கொண்டும் ஸம்ஸ்காரமென்பதை அவாந்தர வியாபாரமாகக் கொண்டும் (ஸ்மிருதிஹி) ஞாபகம் என்ற ஞானம் ஏற்படுகிறது.

எல்லா இந்திரியங்களுக்கும் அவைஅவைகளின் விஷயங்களுக்கு அவ்விஷயங்களின் அபாவங்களுக்கு ஸாக்ஷாத்தாக ஸந்நிகர்ஷம் (சேர்க்கை) என்றொன்றேதான் காரணம். ஆனால் சிலர் இந்த சம்பந்தமானது 1. ஸம்யோகம் 2 ஸம்யுக்த ஸமவாயம் 3. ஸம்யுக்த ஸமவேத ஸம்வாயம் 4. ஸமவாயம் 5. ஸமவேத ஸமவாயம் 6. விசேஷண விசேஷ்யபாவரூபமான மேற்சொன்ன ஐந்து என ஆறுவகைப்படும் என்று கூறுகிறார்கள். உதாரணம் கண் ஒரு குடத்தை க்ரஹிக்கும்போது அவ்விரண்டுக்கும் ஸம்யோகம் என்ற சம்பந்தம். அதே கண் அக்குடத்திலுள்ள ரூபத்தைக் கிரஹிக்கும்போது ஸம்யுக்த ஸமவாயம் என்ற சம்பந்தம் அதே கண் அந்த ரூபத்திலுள்ள ரூபத்வம் என்ற தர்மத்தை கிரஹிக்கும்போது ஸம்யுக்த ஸமவேத ஸமவாயம் என்ற சம்பந்தம். காது ஓர் சப்தத்தை கிரஹிக்குங்கால் அவ்விரண்டுக்கும் ஸமவாயம் என்ற சம்பந்தம். அதே காது அந்த சப்தத்திலுள்ள சப்தத்வம் என்ற தர்மத்தைக் கிரஹிக்குங்கால் ஸமவேத ஸமவாயம் என்ற சம்பந்தம். (தொடரும்.)

---

தால் எப்போதும் அவைகளின் ஸ்பரிசம் நமக்கு ஏற்படவேண்டும். உண்மையில் இந்நான்குக்கும் ஸ்பரிசமே கிடையாது. மனதுமல்ல. ஏனென்றால் மனது அணுவாகவுமிருப்பதால் அதன் ஸ்பரிசம் இந்திரியத்துக்கு விஷயமாகாது. இந்த ஸ்பரிசமோ த்வக் இந்திரியத்துக்கு விஷயமாகிறது. ஆகவே மீதியான வாயு என்ற பதார்த்தத்தினிடம்தான் இந்த ஸ்பரிசம் ஆசிரயித்திருக்க வேண்டும். என்று இம்மாதிரி அனுமானத்தினாலேதான் வாயுவை அறியமுடியும். வாயுவானது ப்ரத்யக்ஷத்திற்கே விஷயம் என்று அனுமானத்தால் ஸாதிக்கப்போனால் உபாதி என்ற தோஷம் ஏற்படும்.



## ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

---

(ஆறாவது ஸர்க்கம்.)

முன் தொடர்ச்சி.

---

1. இவ்வாறு வேதவிரோதிகளான பௌத்தர்கள் மடிந்து போகவும் நாட்டிலெங்கும் உபநிஷத்துக்களும் வேதார்த்தங்களை நிர்ணயிக்கும் பூர்வமீமாம்ஸா சாஸ்திரம் உத்தரமீமாம்ஸா சாஸ்திரமாகிய ப்ரம்மஸூத்திரம் இவைகளும் வர்ணாசிரமதர்மங்களும் பரவின. அதைக்கண்டு ப்ராம்மணர்கள் சந்தோஷமடைந்தனர். யாகயக்ஞாதிகள் ஆங்காங்கு நடைபெற்றன. 2. இப்படிச் சிறிது காலம் செல்ல உலகப்பிரஸித்த கவியான பாரவி என்பவன் பட்டகுமாரன் இயற்றிய பாட்ட சாஸ்திரத்தை பரிசீலனை செய்து அது கர்மத்திற்கு ப்ராதான்யம் தந்து ஈசுவரனுக்கு ப்ராதான்யம் தருவதில்லையாதலால் பாட்டமதம் நிரீசுவரமதமே தானாகுமென்று நிஷ்கரிஷித்து அதில் உதாசினனாய் ஆனான். தவிரவும் ப்ரபாகரனென்ற பிரஸித்தரான மீமாம்ஸா பண்டிதரொருவர் பட்டகுமாரரிடமுள்ள மாச்சரியத்தால் அவர் இயற்றிய நூலை கண்டிக்கவேண்டுமென்ற உத்தேசங்கொண்டு அந்த பாட்ட தந்த்ரத்தை பட்டகுமாரரிடமிருந்து சிரவணம் செய்தார். 3. மேலும் அச்சமயமிருந்த மாகன், வாருசி, பாணன், மயூரன், காளிதாஸன், தண்டி முதலான மகாபண்டிதர்களான கவீசுவரர்களும் பாட்டமதத்தில் நம்பிக்கைவைக்காமல் அதை உதாசினம் செய்தனர். [சாகுந்தலம் முதலியவைகளை இயற்றிய காளிதாஸன் வெகு ப்ராசீனனாயினும் காளிதாஸனென்ற பெயருள்ள அநேக கவிராயர்கள் இருந்திருப்பதாய் ஆராய்ச்சிக்காரர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். ஆகவே காளிதாஸனென்று சொன்னது மூன்றிலும் பொருந்தும்.] 4. தர்கசாஸ்திரத்தில் நிபுணரான உம்பகன், மீமாம்ஸா சாஸ்திரத்தில் நிபுணரான மேற்கண்ட ப்ராபாகரன், தர்கம் மீமாம்ஸை இவைகளில் மகாபண்டிதரான மண்டன

மிச்ரன், ரேபணன் இவர்கள் பட்டகுமாரனிடமிருந்து பாட்ட தந்திரத்தை சிரவணம் செய்தனர். 5. பட்டகுமாரனிடம் மாச்சரியம் விருத்தியாகியிருந்த ப்ராபாகரன் பிறகு வறட்டு யுக்திகளைக்கொண்டு அந்த பாட்ட தந்திரத்தை கண்டித்து தன்வலித் தர்ந்தம் இன்னதென்று காட்டாமல் அநேகவலிந்தாந்தங்களை விஸ்தரித்துக்காட்டுவதான ப்ரபாகர சாஸ்திரத்தை இயற்றினன். 6. இவ்வாறு பரதநாட்டில் பாட்டமதம் நிராகரிக்கப்பட்டு ப்ராபாகரமதம் தலைதூக்கும் சமயத்தில்தான் முன்பு கலிமுதலானவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டவனான மணிமந்தன் பிரம்மாண்டமான யோசனையுடன் மகத்தான காரியங்களை ஸாதிக்கவேண்டுமென்று ஓர் பிராம்மண விதவையிடம் அயோக்யனான கள்ள புருஷனால் பிறந்தான். 7. அந்த விதவையின் பந்து ஜனங்கள் இவ்வாறு ஓர் விதவை மகனைப்பெற்றெடுத்ததால், விதவையிடம் அவளுடைய கணவன் போனபின்பு கள்ளபுருஷனால் பிறந்து கோளக ஜாதியைச்சேர்ந்த இந்த குமாரன் ஜாதியை ஸங்கரப் படுத்துகிறவனாயிருக்கிறான்; வேதத்தில் சொல்லப்பட்டுள்ள உபநயனம் முதலான எந்த கர்மாவுக்கும் அருகனன்று; என்று நிச்சயித்து தாயுடன் அந்த குமாரனை ஜாதியைவிட்டு விலக்கி வைத்தனர். இவ்வாறு க்ஞாதிஜனங்கள் அந்த குமாரனை ஜாதி ஸங்கரம் செய்தவனென்று சொன்னதால் தாயும் அம்மகனை ஸங்கரனென்றே அழைத்தாள்.

[குறிப்பு:- த்வைதமதத்திற்கு விரோதியான அத்வைதமதத்தின் ஸ்தாபகரென்ற மத த்வேஷத்தால் சங்கராசாரியாரை நாராயணபண்டிதாசாரியார் அவர் ஓர் வியபசாரியான விதவையின் மகனென்றும் அவர் அவருடைய ஜாதிஜனங்களால் விலக்கப்பட்டிருந்தாரென்றும் தூஷித்திருப்பதாய் பலர் எண்ணக்கூடும். சங்கராசாரியாரின் சரித்திரத்தை சிறிது ஆராய்ச்சிசெய்தால் நாராயண பண்டிதாசாரியார் அவ்வகை நிந்தனை மார்க்கத்தில் ஈடுபடாமல் அக்காலத்தில் தாம் கேட்டதையே எழுதியிருப்பதாய் தெரியவருகிறது.

முதலில் மணிமந்தன்தானா சங்கராசாரியராய்ப் பிறந்தார் என்பதை பரிசீலனை செய்வோம். ஸ்ரீநாராயணபண்டிதாசாரியாரின் குருவான ஸ்ரீமத்வாசாரியார் அவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கிறார். அதுவுமன்றி அந்த அபிப்பிராயத்துக்கு புராணங்களின் பிராமாண்யமிருந்துவருகிறது. ஸ்ரீஸ்காந்தபுராணத்தில் காணப்படுவதாவது:— "மணிமத்பூர்வகாதுஷ்டா; தைத்யாஸன் கலௌயுகே/ தே குசாஸ்த்ரம் ப்ரகுர்வந்தோ ஹரிவாயு விரோதின:|| தேஷாம் மத்யே ஸங்கரஸ்து பூர்வம்யோ மணிமான் கல:/ ஸௌகந்திகவனே திவ்யே பீமேசேனேன ஹத: புரா/ ஸக்ரோதவசமாபன்ன: மித்யாசாஸ்த்ரம் வதன்புன:/ க்ருஷ்ணே பீமே ச வித்வேஷம் குர்வன் பூமாவஜாயத|| காலடிக்ராமகே ருத்ரவரான் லோகான் விமோஹயன்||" இதன் தாத்பரியம் யாதெனில், துஷ்டர்களான மணிமந்தன் முதலான அஸுரர்கள் குச்சிதமான சாஸ்திரங்களை ப்ரவசனம் செய்துகொண்டு ஹரி வாயு இவர்களுக்கு விரோதிகளாய் கலியுகத்தில் பிறந்தனர். அவர்களில் ஒருவன் ஸங்கரனென்பவன். எவன் பூர்வம் ஸௌகந்திகத் தாமரைக்காட்டில் பீமசேனனால் கொல்லப்பட்டானோ அந்த அயோக்யனான மணிமந்தனேயாவான். அவன் அந்த கோபத்திற்குள்ளாகி எல்லாம் மித்யை பொய் என்று சொல்லும் சாஸ்திரத்தைச்சொல்லிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரிடத்திலும் பீமசேனரிடத்திலும் மதத்வேஷம் செய்துகொண்டு காலடி என்னும் கிராமத்தில் பூமியில் பிறந்தான். பரமசிவனுடைய வரத்தால் உலகத்தாரை மயக்கினன் என்று இவ்வாறு ஸ்பஷ்டமாயிருக்கிறது. மேலும் கூர்மபுராணம் ஸ்ரீமுஷ்ண மகாத்மியத்தில் கலியுகத்தில் பாகவத தர்மங்களும் ஸத்சாஸ்திரங்கள் கெடப்போகிறதென்று ப்ரச்னம் செய்ததற்கு வாமதேவர் சொல்வதாவது:— "சதுஸ்ஸஹஸ்ரே த்விசதே கதே ஸௌகந்திகேவனே/ நிஹதா: பீமஸேனேன த்வாபராந்தே நிருபோத்தம|| ஸௌகந்திகாக்யே நிஹதா: தேதைத்ய ப்ரவரா: கலா:| ருத்ரேண நிஹதா ஏச த்ரைபுராஸ்ச கலௌயுகே|| சதுஸ்ஸஹஸ்ரே த்விசதே கதே மணிமதாதய:| ஜனிஷ்யந்தி ப்ரம்மயோனௌ தைத்யா ஸ்ஸத்கர்ம தூஷகா:| மித்யாவாதமலச் சாஸ்த்ரம் கரிஷ்யந்திகலௌயுகே|| என்றார். அரசனே! த்வாபரயுகத்தின் கடைசியில் ஸௌகந்திகவனத்தில் பீமசேனரால் கொல்லப்பட்ட மகா அஸுரர்களும் த்ரிபுரர்

ஸம்ஹாரயுத்தத்தில் கொல்லப்பட்ட அஸுரர்களும் கலியுகத்தில் 4200 வருஷம் ஆனபின்பு அந்த மணிமந்தன் முதலானவர்கள் ப்ராம்மண வம்சத்தில் ஸத்கர்மங்களைக்கெடுப்பவர்களாய் மித்யாவாதமாகிற அஸத்தான சாஸ்திரத்தை இயற்றப்போகின்றனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் கருடபுராணத்தில் "மணிமன்நாம தைத்யஸ்து ஸங்கராக்யோ பவிஷ்யதி| ஸர்வேஷாம் ஸங்கரம் யஸ்து கரிஷ்யதி ககோத்தம| தேன ஸங்கரநாமாஸௌ பவிஷ்யதி நஸம்சய:|| தர்மான் பாகவதான் தத்வான் நாசயிஷ்யதி ஸர்வதா||" என்று காணப்படுகிறது. மணிமானென்ற தைத்யன் ஸங்கரனென்று பெயர்கொண்டு பிறக்கப்போகிறான். ஹே கருடா! அவன் எல்லாஜாதியையும் ஸாங்கரியம் செய்யப்போவதால் அவன் சங்கரனென்றே அழைக்கப்படப்போகிறான். எல்லா பாகவத தர்மங்களையும் சம்பூர்ணமாய் நாசம் செய்யப்போகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பிரமாணங்களைக்கொண்டு ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் மணிமந்தன் சங்கராசாரியாரென பிறந்தானென சொல்லியிருப்பதாய் நிச்சயிக்க இடமிருக்கிறது பாத்மபுராண வசனத்திற்கு ஐக்கண்ட்யம் செய்ய மணிமந்தனிடம் ருத்திரனின் ஆவேசமிருந்ததாய்ச் சொல்லவேண்டும்.

இனி சங்கராசாரியாரின் தாய் அவர் பிறக்கும்பொழுது விதவையா என்பதை கவனிப்போம். அவள் விதவை என்றே சங்கராசாரியாரை சிலாகிக்க எழுதிய அம்மதத்தினரின் சங்கர விஜயங்களாலேயே தெரியவருகிறது. சங்கராசாரியாரின் சாக்ஷாத் சிஷ்யராகிய ஆனந்தகிரி எழுதிய சங்கரவிஜயத்தில் காணப்படுவதாவது:—"விசிஷ்டேதி ச நாம்னா து ப்ரஸித்தாபூன் மஹீதலே| தாமஷ்டமேப்தே விப்ராய சாந்தாய அத்புதகர்மிணே|| ப்ரததௌ விச்வஜின்னும்னே ஸர்வக்ஞோஸ்யா: பிதாஸ்வயம்| ஸா ஸதாபதி மத்வைதம் த்யாத்வாகாசாத்மகம் சிவம்| தஸ்யாராதன யத்யுக்ரா மாசகார விவேகினீ|| தாதிருசீமபி ஸம்த்யஜ்ய யயௌவிச்வஜிதத்புதம்| அரண்யம் தபஸே கிருத்வாமனோ நிஸ்சலதாம் கதம்|| ததாப்ரப்ருதி ஸாநாரீசிதம்பரமகேச்வரம்| தோஷயமாஸ பூஜாபிர்த்யானை ராத்மகதைஸ்ஸதா|| ஸதேவஸ் ஸர்வபூர்ணோபி தஸ்யாவதனபங்கஜம்| ப்ரவிச்ய விஸ்மிதான் குர்வன் ஜனனஸ்யான் ஸமாகதான்|| ப்ராப்தேது தசமேமாஸி விசிஷ்டா கர்பகோளத:| ப்ராதுராஸீன் மஹாதேவ: சங்கராசார்ய நாமத:||"

(தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

அப்யங்க ஸ்நானத்தை ப்ரதமை, த்விதியை, ஷஷ்டி, ஸப்தமி. அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி த்வாதசி த்ரயோதசி சதுர்தசி, அமாவாஸை சிரார்த்தநாள், அதற்கு முந்தியநாள் ரிக்தாதிதி, பர்வாஷ்டமி ஸங்க்ரமணதினம், கிரஹணதினம் இந்த நாட்களில் செய்யலாகாதென்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாகாதென்றால் அன்று பச்சை எள்ளு எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாகாதென்பது தாத்பரியமென்று யமஸ்மிருதி அறிவிக்கிறது. மங்களவாரத்தன்று எண்ணெய் தேய்த்துக்கொள்ளநேர்ந்தால் எண்ணெயில் துளசி மிருத்திகைப்போட்டு காய்ச்சினால் அந்தவார தோஷம் நீங்கும். எள்ளு எண்ணெயால் அப்யங்கம் புண்யகரமானது. நெல்லிக்காய் போட்டு காய்ச்சின எண்ணெயால் ஸ்ரீப்ராப்தி. தீபாவளிபண்டிகை, விவாகாதிமஹோற்சவகாலம், ஸம்வத்ஸரப்பண்டிகை திமை, புண்யாஹவாசன தினம் தலைவலி வந்தசமயம் உபாகர்மநாள் பலிப்ரதிமை, இந்நாட்களில் எவ்வகை தோஷமுமில்லை. தசமியன்று அப்யங்கம் செய்துகொண்டால் புத்ரநாசம் த்ரயோதசியன்று தனஹானி. த்விதியையன்று பர்த்ருநாசம் என்று சொல்லப்படுகிறது. காலையில் கொண்டுவந்துவைக்கப்பட்டிருந்த ஜலத்தால் இரவில் ஸ்நானம் செய்யநேர்ந்தால் அதை அக்னி சம்மந்தப்படுத்திதான் ஸ்நானம் செய்யவேண்டுமென்று ஓர் ஸ்மிருதிக்காரர் அறிவிக்கிறார்.

ஒரு வேளைதான் ப்ரம்மசாரி ஸ்நானம் செய்யவேண்டும். கிருகஸ்தாசிரமி வானப்ரஸ்தன் காலையிலும் மத்யான்ஹத்திலும்தான் ஸ்நானம் செய்யவேண்டும். ஸன்யாஸி ப்ராத: மத்யான்ஹம் ஸாயந்திரம் மூன்று வேளையும் ஸ்நானம் செய்யவேண்டும். கிழிந்த வஸ்திரத்துடனேயாவது, இதரனுடைய ஈரவஸ்திரத்தை உடுத்திக்கொண்டாவது, தையல் போட்ட வஸ்திரத்துடனேயாவது ஸ்நானம் செய்யலாகாது ஆனால் கௌபீனத்துடன் ஸ்நானம் செய்யலாம். மூன்றுதரம் ஜலத்தில் மூழ்க வேண்டும். ப்ரவாகத்திற்கு அபிமுகமாய் ஸ்நானம் செய்யவேண்டும் தடாகங்களில் சூரியனுக்கு அபிமுகமாய், இரவில் வடக்கு, கிழக்கு ஆக்னேயமூலை இவைகளுக்கு அபிமுகமாகவுமிருந்து ஸ்நானம் செய்ய வேண்டும். ரிக்வேதி ஸாமவேதி ஆதர்வணவேதிகள்தான் நதிகளின் ப்ரவாகத்திற்கு அபிமுகமாகவேயல்லாது யஜுர் வேதிகள் சூரியனுக்கு

அபிமுகமாகத்தான் ஸ்நானம் செய்யவேண்டும். மூழ்கும்போது கை விரல்களால் இரண்டு காதுகள், கண்கள், மூக்கு வாய் இவைகளை மூடிக்கொள்ளவேண்டும். மூன்றுதரம் ஜலத்தில் மூழ்கி ஸர்வாங்கத்தையும் கையால் தேய்த்து சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். வஸ்திரத்தால் சுத்தப்படுத்திக்கொள்ளலாகாது. தேய்த்துக்கொண்டபின் பிறகு ஸ்நானம் செய்தால்தான் ஸ்நானம் செய்தவனுக்கு ச்ரேயஸ். ப்ராத ஸ்நானத்தில்தான் உடம்பைத் தேய்த்துக்கொள்ளவேண்டுமேயல்லாது மத்யான்ஹஸ்நானகாலத்தில் உடம்பைத்தேய்த்துக்கொள்ளலாகாதென்பது ஸாதரின் அபிப்பிராயம். வஸ்திரத்தால் மத்யான்ஹ ஸ்நானமானதும் சரீரத்தை துடைத்துக்கொள்ளவும் கூடாதென்றும் சூரியகிரணத்தாலோ அல்லது காற்றாலோ உலரச்செய்யவேண்டுமென்றும் ஒரு சிலரின் அபிப்பிராயம். மூன்றுதரம் மூழ்கி மூன்று தரம்ஸ்நானம் செய்தபின் ஆசமனம் செய்யவேண்டும். ஜலத்தாலேயே சரீரத்தில் த்வாதச புண்ட்ரங்களை தரித்துக்கொள்ளவேண்டும். ஸ்நானம் செய்யும்பொழுது கையாலோ காலாலோ ஜலத்தை அடிக்கக்கூடாது. பகவான் ஸ்ரீவிஷ்ணு ஜலரூபியாய் தேஜோமயராய் நதியில் இருப்பதாய் த்யானம் செய்யவேண்டும். அந்த பகவானிடம் ப்ராணன் த்ரவமயமாக இருக்கிறார். அவரிடம் த்ரவரூபியாய் விஷ்ணுமிருக்கிறார். அஷ்டாக்ஷரி விஷ்ணு மந்த்ரம் இவைகளை ஜபித்து மூழ்கவேண்டும். பிறகு அர்க்யங்களைக் கொடுக்கவேண்டும் நம. கமலநாபாய நமஸ்தே ஜலசாயினே| நம ஸ்தேஸ்து ஹ்ருஷீகேச க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே என்று விஷ்ணுவுக்கு இரண்டுகையால் ஜலத்தை எடுத்து அர்க்யமும் எஹிஸூர்ய ஸஹஸ்ராம்சோ தேஜோராசே ஜகத்பதே| அனுகம்ப மாம்பக்த்யா க்ருஹாணார்க்யம் நமோஸ்து தே என்று சூரியனுக்கு அர்க்யத்தையும் கொடுக்கவேண்டும். பிறகு அந்தந்த நதியின் அர்க்ய மந்திரத்தைச்சொல்லி அர்க்யம் கொடுக்கவேண்டும். அல்லது அந்த மந்திரம் தெரியாதிருந்தால் விஷ்ணு பாதாப்ஜ ஸம்பூதே கங்கே த்ரிபத காமினி| க்ருஹாணார்க்யம் மயாதத்தம் ஜலே ஸந்நிஹிதா பவ|| என்ற கங்கா அர்க்ய மந்திரத்தைச்சொல்லி அந்தந்த நதிகளில் கங்கையைத்யானம் செய்யவேண்டும். ஏகாதசியாயிருந்தால் நதிதேவதைகளுக்கு அர்க்யம் தரலாகாது. தேவதைகளுக்குமட்டில் அர்க்யம்தரண். பிறகு ப்ராம்மணர்களிடமிருந்து அனுமதி பெற்று ஜலத்தில் ஓர் வட்டம்போட்டு நான்குபுறங்களிலும் நடுவிலும் ஓம்காரத்தைப்போட்டு அதில் ஸ்நானம் செய்யவேண்டும். (தொடரும்.)



# செய்தித்திரட்டு.

4—2—33 உயன்று ஆரணி ஜாகீர்தாரவர்களின் தலைநகராகிய ஸத்யவிஜய நகரத்தில் ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயிலில் புதிதாய் ஏற்பட்டிருந்த பெரிய கொட்டகையில் 4—2—33 உயன்று மத்வ நவமி கொண்டாடப்பட்டது. அன்று காலையில் தேவதா பூஜையும் மத்வவிஜயபாராயணமும் பிறகு 12 மணி வரையில் மதராஸ் ஸ்ரீமவே ஸத்யானந்தம் கிருஷ்ணாசாரியாரால் ஸ்ரீபகவத் பாதாளின் மகிமையும் ஆ வாயுபகவானின் அவதாரரகஸ்யமும் கேட்பவர்களுக்கு அதி பக்தியும் நம்பிக்கையும் உண்டாகும்படி நன்கு உபன்யாசம் செய்யப்பட்டதென்றும் அந்நகர் சுற்றுப்பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து அநேகர் வந்திருந்தனரென்றும் பிறகு ஜனங்களுக்கு அநேகவித தக்கடாக்களுடன் பிருஷ்டான்னம் அளிக்கப்பட்டதென்றும் இரவு 8 மணிக்குமேல் ஸ்ரீ ஆசாரியாரின் உருவப்படமும் ஸ்ரீ ஆஞ்ஜனேயர் படமும் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் ஊர்வலமாய் கொண்டுவரப்பட்டதென்றும் வழிநெடுகவும் ஜாகீர்தார் அரண்மனை எதிரேயுள்ள பெரியமைதானத்தில் ஊர்வலம் நின்ற இடத்திலும் அநேகவிதமான பாணவேடிக்கைகளும் நடந்தன. பஜனை கோஷ்டிகளும் வேதபாராயண கோஷ்டிகளும் பின் தொடர்ந்ததும் எல்லா மதஸ்தர்களும் தீபாராதனை செய்ததும் குறிப்பிடத்தகுந்தது. ஊர்வலம் வெகு ரம்யமாயும் கௌரவமாயுமிருந்தது. காஞ்சிபுரம் கருடோற்சவகாலத்தில் அன்னதானதர்மம் செய்யும் ஸ்ரீமான் நாட்டேரி குப்பாசாரியார் யாவற்றையும் மேல்பார்வை பார்த்துவந்தார். இவ்வூர் மாத்வர்கள் ஏகமனதாய் இந்த உற்சவத்தை அதிகப்பணச்செலவுடன் விமர்சையாய் நடத்தியதும் சிலாகிக்கத்தகுந்ததே. ஆனால் இப்பேர்ப்பட்ட மங்களகரமான விஷயங்களில் இவ்வூர் பிரபல ஜாகீர்தாரான திருமல்ராவ் சாகேப் அவர்கள் நேரிலிருந்து தாராளமாய் பண உதவி செய்து நடத்தியிருந்தால் நன்றாயிருக்கும். இதார்களும் சரியான சந்தர்ப்பங்களில் இக்காரியத்திற்கு முக்யகாரணமாயிருப்பவர்களுக்கு சகாயம் செய்து சமூக கௌரவத்திற்கு லாயக்கான தர்மம். இது இவ்வருடம் சிறிது குறைவாயிருந்தது என்பது இச்சமயம் குறிப்பிடவேண்டியதாயிருக்கிறது.

ஓர் அபிமானி, ஆரணி.

19-2-33 உயன்று இந்நகர் உத்திராதிமடம் கட்டிடத்தில் கும்பகோணம் மாத்வமகாஜனங்களின் ஆதரவில் த்வைத வேதாந்த பாடசாலை ப்ரதான பண்டிதர் ஸ்ரீமவே ஸ்ரீரங்கம் கோபாலாசாரியார் அக்கிராஸனத்தின்கீழ் ஆஸ்திகமகாஜனங்களின் ஓர் பெருங்கூட்டம் கூடியது. அங்கு ஸ்ரீஉத்தராதிமடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகளின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டுவைத்திருந்தது. இம்மித்திரன் பத்திராதிபர் அடியிற்கண்ட தீர்மானங்களை ப்ரேரிபித்தார். (1) இந்திய சட்டசபையில் ஸ்ரீமான் C. S. ரங்கய்யர் முதலி

யோர் கொண்டுவரப்போகும் தீண்டாமை ஒழிக்கும் மசோதாவும் ஆலய ப்ரவேசமசோதாவும் சாஸ்திரத்திற்கும் சிஷ்டாசாரத்திற்கும் விரோதமானதால் இந்த மகாநாடு அவைகளை அழுத்தமாய்கண்டிக்கிறதென்றும் அவைகள் நிறைவேறாதபடி கவர்ன்மெண்டார் தடுக்கவேண்டுமென்றும் இதுவரையும், மதசம்பந்தமான விஷயங்களில் அவர்கள் பிரவேசிக்கிறதில்லையென்ற புத்திசாலித்தனமான கொள்கையையே இப்போது அவர் கைக்கொள்ளவேண்டுமென்றும் இந்தக்கூட்டம் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது. (2) இந்து மதத்தின் அடிப்படையான கொள்கைகளையே அழிக்கக்கூடியதாயுள்ள இந்த மசோதாக்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவோ அல்லது நிறைவேற்றிவைக்கவோ ஏகதேச அபிப்பிராயமுள்ள ஜனங்களடங்கிய இந்திய சட்டசபைகளுக்கு அதிகாரமில்லையென்றும் மிஸ்டர் காந்தி மாளவியா முதலியவர்கள் ஸநாதனதர்மிகளின் பிரதிநிதிகளல்லவென்றும் அவர்கள் ஸநாதனதர்மிகளின் அபிப்பிராயத்தைக் கொண்டவர்களல்லவென்றும் அவர்களின் வார்த்தையையே பிரமாணமாகக் கவர்ன்மெண்டார் கொள்ளலாகாதென்றும் இந்த கூட்டம் அபிப்பிராயப்படுகிறது. இந்த தீர்மானங்களை பண்டிதராஜ் ஸ்ரீமான் R.V கிருஷ்ணமாசாரியார் ஆமோதித்துப்பேச ஏகமனதுடன் நிறைவேறியது. இச்சமயம் இப்பத்திராதிபர் ஸநாதன தர்மங்களின் மேன்மையைப்பற்றியும் காங்கிரஸ் வாதிகள் செய்துவரும் விஷமமான பிரசாரத்தைப்பற்றியும் மாத்வர்கள் இவ்வியக்கத்தில் உதாஸினமாயிருப்பதைப்பற்றியும் பேசினார். (இது அடுத்த பத்திரிகையில் வெளிவரும். பபர்.)

## குறிப்பு.

மகாமகத்தன்று இப்பத்திரிகை வெளியாக எத்தனப்பட்டதால் அச்சாபீஸில் ஏற்பட்ட விடுமுறை நாட்களை உத்தேசித்து இம்மாதத்திய சஞ்சிகையில் சிறிது பக்கங்கள் குறைவடைந்திருக்கின்றன. மகாமகத்திற்காக இந்நகரில் இதுவரை சுமார் 8 லட்சம் ஜனங்கள் கூடியிருக்கின்றனர். மற்ற விபரம் அடுத்தபத்திரிகையில் காணலாம். தேவதைகளின் அருளால் ஜனங்களெல்லோரும் யாதொரு உபாதியின்றி ஸௌகர்யமாயிருக்கின்றனர்.

---

## விசேஷதினங்கள்

| | | |
|---|---|---|
| 27—3—34 | சோமவாரம் | ஸ்ரீமுக ஸம்வத்ஸரப் பண்டிகை, |
| 4—4—34 | மங்களவாரம் | ஸ்ரீராம நவமி, |
| 6—4—34 | குருவாரம் | ஏகாதசி. |
| 10—4—34 | சோமவாரம் | சித்ராபௌர்ணமி. விஷ்ணுபஞ்சக உப. |
| 18—4—34 | மங்களவாரம் | சிரவண உபவாஸம், விஷ்ணுபஞ்சக உப, |
| 20—4—34 | குருவாரம் | ஏகாதசி. |
| 30—4—34 | ஸோமவாரம் | காக அமாவாஸ்யை. அச்வத்த ப்ரதக்ஷிணம் விஷ்ணுபஞ்சக உபவாஸம். |

208703
சென்னை